விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 25 திங்கட்கிழமை (11.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

## சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு

### இன்று மேலும் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் சாத்தியம்



(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 1,257 ரூபாயினாலும் 5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 503 15

## விலையேற்றத்தினை கட்டுப்படுத்த முடியாது

### அரசாங்கம் கைவிரிப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அலாவுதீனின் அற்புத விளக்கு எம்மிடமில்லை.

நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் 15

## கொரோனாவால் 35 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் ஒரே நாளில் 35 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படை 15

### அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு

# புதிய முறைமையின் கீழ் தேர்தல் நடத்தப்படும்



### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வாக்குறுதியளித்தபடி புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கை இராணுவத்தின் 72ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு இராணுவத்தினர் 15

## கொரோனாவால் யாழில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த வயோதிபப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் 15

## மாலதியின் நினைவேந்தல் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு



(முறிகண்டி)

முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற 15

## குமாரதாஸ் மாப்பாணரின் திருவுடல் தீயுடன் சங்கமம்

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் எஜமானர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் திருவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது.

நேற்று அதிகாலை முதல் நல்லூரில் அமைந்துள்ள மாப்பாணர் வளவு இல்லத்தில் அவரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

அவரின் உடலுக்கு அதிகாலை முதல் ஆன்மீகத் தலைவர்கள், 15


## வவுனியா விபத்தில் பொலிஸார் இருவர் பலி

(கரணவாய்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தின்போது பொலிஸ் பிரிவினைச் சேர்ந்த இருவர் உயிரிழந் 15

# 19ஆவது திருத்தத்தின் கீழ் ஆட்சியைத் தொடருங்கள்

### அரசுக்கு ரணில் அறிவுரை



(கொழும்பு)

**20ஆவது திருத்தத்தினை இரத்துச் செய்து அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்ல வேண்டும் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

(15ஆம் பக்கம் பார்க்க)

## 6 பிள்ளைகளின் தந்தை கால்வாயில் சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் பரிதாபம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் சடலம் கால்வாயிலிருந்து மீட் 15

### 12 வருடங்களின் பின்னர்

## தமிழ் அரசியல் கைதி தடுப்பிலிருந்து விடுதலை

(வவுனியா)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு 12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி 15

## குற்றப் புலனாய்வுத் துறையினர்
# வைத்தியர் ஜயருவனிடம் 7 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தில் ஆஜரான வைத்தியர் ஜயருவன் பண்டாரவிடம் சுமார் ஏழு மணி நேரம்வரை விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 9ஆம்திகதி காலை 8.00 மணிக்கு சி.ஐ.டி. யில் ஆஜராகிய வைத்தியர் ஜயருவன் பண்டாரவிடம் பிற்பகல் 3.15 மணிவரை விசாரணைகள் இடம்பெற்றதாக சி.ஐ.டி. தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் விசேட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், அவசியம் ஏற்படின் மீள விசாரணைக்கு அழைப்பதாக கூறி வைத்தியர் ஜயருவன் பண்டார விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சமுதித்த நடத்திய நேர்காணலில், வைத்தியர் ஜயருவன் பண்டார வெளிப்படுத்திய விடயங்களை மையப்படுத்தி, தவறான தகவல்களை மக்களுக்கு தெரிவித்ததாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக, விடயங்களை அறிந்துக்கொள்வதற்காக வைத்தியர் ஜயருவன் பண்டார இவ்வாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். (ஞா)

## தடுப்பூசியின் 2 ஆவது அலகு எடுத்து
# 6 மாதங்களின் பின்னரே 3 ஆவது அலகு வழங்கப்படும்

(கொழும்பு)

கோவிட்-19 தடுப்பூசியின் மூன்றாவது அலகானது இரண்டாவது அலகு எடுத்து 6 மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும் போதே சுகாதார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கள் அந்த ஆலோசனையைத் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

20 வயதுக்கு மேற்பட்ட கோவிட்-19 தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது அலகுகளைப் பெற்றவர்களுக்கு மூன்றாவது அலகாக பைசர் தடுப்பூசி மருந்தை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதற்குத் தேவையான 14.5 மில்லியன் பைசர் தடுப்பூசிகளின் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியின் மூன்றாவது அலகு வழங்கும்போது மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். (ஞா)



## காணாமல்போன சிறுவன் வாய்க்காலில் சடலமாக மீட்பு
### சங்கானைப் பகுதியில் துயரம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் காணாமல்போன சிறுவன் வெள்ள வாய்க்காலில் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலையில் தரம்-01 இல் கல்வி கற்றுவரும் நிரோஜன் ஸ்பன் (வயது-6) எனும் சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

மேற்படி சிறுவன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம்முதல் காணாமல்போயுள்ளான். இதனையடுத்து குடும்பத்தினர், அயலவர்கள் பல மணி நேரமாக குறித்த சிறுவனைத் தேடியுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன் தினம் இரவு 9.30 மணியளவில் மேற்படி வெள்ள வாய்க்காலில் வெள்ளம் தேங்கியிருந்த நிலையில் வெள்ளத்தில் மூழ்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-18,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



நினைவஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் நாவின்ன மருத்துவர் S.G. கிஷோலோஜன் அவர்களின் அன்புத் தந்தை

இராஜரத்தினம் ஸ்ரீபாலரத்தினம்



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு : 02.09.1949
இறப்பு : 09.09.2021

(8210)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகுப்பிள்ளை தங்கவேலு



கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.

பிறப்பு 1953.01.25

இறப்பு 2019.10.04

கல்லாறு, சுண்டிக்குளம்,
மீள்குடியேற்றக் கிராமம்.

(C-2802)

குடும்பத்தினர்

## 13 ஆவது திருத்தம் குறித்து

# இந்திய வெளியுறவு செயலாளர் கோரிக்கை எதுவும் முன்வைக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக இந்திய வெளியுறவு செயலாளர் எந்த கோரிக்கையும் முன்வைக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஆகவே இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கை வருகை தொடர்பாகபல்வேறு தரப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு இதுவரை எந்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப் படவில்லை என்றும் கூறினார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இந்த விடயம் இன்னும் விவாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு நாட்டுக்கு நன்மை பயக்கும் ஒரு முடிவு எட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (4-5)

## மரணங்கள் குறைந்தாலும் ஆபத்து குறையவில்லை

### பேராசிரியர் சன்ன ஜயசுமன



(கொழும்பு)

தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால், கொவிட் வைரஸ் தொற்று நோயின் ஆபத்து குறைந்துள்ளது என தவறாக எண்ண வேண்டாம் என மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

மக்கள் தற்போது வழிப்பாட்டுத்தலங்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் மரணச் சடங்குகளில் அதிகளவில் ஒன்று கூடி வருகின்றனர்.

இது தவறான முன்னுதாரணம். தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் குறைந்துள்ளதால், ஆபத்து குறைந்து விடவில்லை.

எந்த நேரத்திலும் இந்த நிலைமை மாறக் கூடும் எனவும் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்துள்ளார். (4-5)

## பொருளாதாரத்தை மேம்படுத்த கட்சி பேதமின்றி செயற்பட வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா



(கொழும்பு)

பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் கட்சி பேதமின்றிய வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக நாட்டின் சட்டத்திற்கமைய முன்னெடுக்கப்படும் வெளிநாட்டு முதலீடுகளை எதிர்ப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு எதிரான செயற்பாடாக கருதப்படும் என கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டை முன்னேற்றும் நோக்குடன் அரச தலைவர்கள் நிலைபேறான அபிவிருத்தி யோசனைகளை முன்வைக்கும் போது ஒரு தரப்பினர் எதிர்த்தார்கள். இன்றும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களுக்கு அரசியல் நோக்கமில்லாமல் ஆதரவு வழங்க வேண்டும்.

தேசிய வளங்களைப் பாதுகாக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டு. கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் பங்குகள் ஒப்பந்த அடிப்படையில் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர விற்கப்படவில்லை என்பதை எதிர்த்தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்து வெளிநாட்டு முதலீடுகளை இல்லாதொழிக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்து அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை அரசாங்கம் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்கிறது என அவர் தெரிவித்தார். (4-5)

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து அந்த சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரையில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர்களுக்கான இடமாற்றங்கள் உரிய முறையில் இடம்பெறாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (4-5)

## பிரதமருடனான சந்திப்பு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

ஆசிரியர்கள் - அதிபர்கள் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை பிற்போடப் பட்டுள்ளது.

இந்த சந்திப்பு இன்று நடைபெறுமென முன்னதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே குறித்த பேச்சுவார்த்தை பிற்போடப் பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் தங்களது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5)

# இருபது-20 உலகக் கிண்ணம் பரிசுத் தொகைகள் அறிவிப்பு



இருபது-20 உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிக்கான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலான ஐசிசி அறிவித்துள்ளது.

இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

வங்க தேசம், அயர்லாந்து, நமீபியா, நெதர்லாந்து, ஓமன், பப்புவா நியூ கினியா, ஸ்கொட்லாந்து மற்றும் இலங்கை ஆகிய எட்டு அணிகள் 'ரவுண்ட் 1' சுற்றில் பங்கேற்கின்றன.

இதற்கிடையில், சுப்பர் 12 சுற்றுக்கு ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவு ஆகிய 8 அணிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், இருபது-20 உலகக் கிண்ணத்துக்கான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலான ஐசிசி அறிவித்துள்ளது.

அதன்படி சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் 12 கோடி ரூபாய்) வழங்கப்படும்.

இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து இரண்டாவது இடம் பிடிக்கும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் 6 கோடி ரூபாய்) கொடுக்கப்படும்.

அரையிறுதியில் தோல்வியடையும் இரண்டு அணிகளுக்கு தலா 4 இலட்சம் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் 3 கோடி ரூபாய்) கொடுக்கப்படும்.

ஒட்டுமொத்தமாக, இருபது-20 உலகக் கிண்ண போட்டிக்கு 5.6 மில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் 42 கோடி ரூபாய்) ஒதுக்கப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது. (4-6)

# ஆப்கான் அணியின் ஆலோசகராக அண்டி பிளவர் நியமனம்



2021 ஆம் ஆண்டுக்கான 20-இருபது உலகக் கிண்ணத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக சிம்பாவே அணியின் முன்னாள் தலைவர் அண்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண போட்டிகளுக்கு முன்னதாக அண்டி பிளவர் அணி குழாமுடன் இணைந்திருப்பதை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிக்கை ஒன்றினை வெளியிட்டு உறுதிப்படுத்தியது.

அண்டி பிளவர் ஆப்கான் அணியுடன் இணைந்ததில் மகிழ்ச்சியடைவதாகவும் அவரது அனுபவம் உலகக் கிண்ண தொடரில் தமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் அஜிசுல்லா ஃபாஸ்லி கூறியுள்ளார். (4-6)







**சௌந்தர்யா** | **யதுஷா** | **நிவேதா**










**காருன்** | **லதீஷ்** | **யரோஜ்**










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

11.10.2021
புரட்டாதி 25, திங்கட்கிழமை
பஞ்சமி காலை 6.50 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.27 மணிவரை
கேட்டை மாலை 5.55 மணிவரை
சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகு காலம் -7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்- பரணி, கார்த்திகை

வள்ளுவன்



மேஷம்

பயணங்களின் போது விழிப்புணர்வு அவ சியம், ஒரு வேலையை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.



ரிஷபம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங் கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு.



மிதுனம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், சுப காரியங்களில் ஆர்வம் கூடும், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவ மான நாள்.



கடகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட் டுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளை களால் பெருமை காணும் நாள்.



சிம்மம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், செய்தொழிலில் அதிக பிர யாசை காட்டும் நிலையுண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள்.



கன்னி

உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங் கும் நாள், செயற் பாடுகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.



துலாம்

தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திக ளால் உற்சாகமடைவீர்கள்.



விருச்சிகம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உறவினர் பகை அகலும், முன்னேற்றம் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



தனுசு

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்பட லாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுற்றி யிருப்பவர்களை அனுசரித்துச் செல் வது நல்லது, வேலைச்சுமை கூடும்.



மகரம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



கும்பம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் உங்கள் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், செயற்பாடுகளில் அதிக பிர யாசை காட்டுவீர்கள்.



மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக் கும் பயணங்கள் இடம் பெறலாம்.

வாழ்க்கையில் சம்பாதிக்க வேண்டிய மிகப்பெரிய விசயம் பொறுமை

# தொற்றிலிருந்து குணமடைந்த கர்ப்பிணிகளுக்கு சுவாசிப்பதில் சிரமம்

## விசேட வைத்திய நிபுணர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான கர்ப்பிணிகளுக்கு தொற்றிலிருந்து குண மடைந்து சுமார் 4 வாரங்களின் பின்னர் சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன.

இவை தொடர்பில பிரசவம் மற்றும் நரம்பியல் தொடர்பான வைத்தியர்களின் ஆலோசனை பெறுவது அவசியமாகும் என பிரசவம் மற்றும் நரம்பியல் தொடர் பான விசேட வைத்திய நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் இவ்வாறான அறிகுறிகள் தொடர்பில் வைத்திய நிபு ணர் சனத் லெனரோல் மேலும் தெரிவிக் கையில்,

கொரோனாத் தொற்றுறுதியான கர்ப் பிணிகள் தொற்றிலிருந்து குணமடைந்து சுமார் 4 வாரங்களின் பின்னர் சுவாசி ப்பதில் சிரமம், உடல் வலி, தலை வலி போன்ற சில அறிகுறிகள் ஏற்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு பின்னரான இந்த அறிகுறிகள் 6 மாதங்கள் வரை காணப்படும். எனினும் இது பாரதூரமான நிலைமை அல்ல.

எவ்வாறிருப்பினும் இது போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் துரிதமாக பிரசவ மற்றும் நரம்பியல் தொடர்பான வைத்தியரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கர்ப்பிணிகளை அறிவுறுத்துகின்றோம் எனத் தெரி வித்தார். (4-5)

## றிசாத் விவகாரம்

# ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகருக்கு கடிதம்

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியு தீனுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை உடனடியாக பாராளுமன் றத்திற்கு அறிவிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியினர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் எழுத்துமூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதில் சுமார் 40 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படுகி றது.

அவர் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருந்தால், அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அவரை உடனடியாக விடுவிக்க வேண் டும் என்று அந்த கடிதத்தில் கோரப்பட்டு ள்ளது. (4-5)




# குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் திருவுடல் தீயுடன் சங்கமம்



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் நல்லூரில் அமைந்துள்ள "மாப்பாணர் வளவு" இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)

## கார் - மோட்டார் சைக்கிள் விபத்து : ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம்-கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மோட்டார் சைக்கிளும் காரும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதில் கச்சாய் வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபர் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7-5-30)

## அசாதாரண சூழ்நிலைகளிலும் நிர்வாகத்தை குறைவின்றி நடத்தியவர்

### சுமந்திரன் இரங்கல்

இலங்கையில் உள்ள பிரதானமான மதவழிப்பாட்டு ஸ்தலங்களில் ஒன்றாகிய நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நிர்வாக அதிகாரியும் அறங்காவலருமான பெருமதிப்புக்குரிய குமாரதாஸ மாப்பாண முதலியார் காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டு பெரும் துயரடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாக இருந்து மறைந்த மாப்பாண முதலியாரின் இழப்பு குறித்து இரங்கல் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரது இரங்கல் செய்தியில் 1964 ஆம் ஆண்டு ஆலயத்தினுடைய அறங்காவலராக பொறுப்பெடுத்த காலம் தொடக்கம் தற்போது வரை ஆலயத்தினை நிர்வகித்து வருவதுடன் அசாதாரணமான காலங்களிலும் நெருக்கடியான காலங்களிலும் நிர்வாகத்தை குறைவின்றி நடத்தி கடமை, கண்ணியம் கட்டுப்பாடு, ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற கொள்கைகளை தொய்வின்றி நிறைவேற்றும் உதாரண புருஷராக திகழ்ந்தார்....மிகப்பிரதானமான ஆலயத்தின் தலைவராகவும் உரிமையாளராகவும் இருந்தும் தமக்கென்று எந்தவித முக்கியத்துவமான சடங்கு சம்பிரதாயங்களை தவிர்த்து ஆலயத்துக்கு வரும் பக்தர்களுடன் பக்தனாகவும் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற அந்த உன்னத நிலையினை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதாக இருந்ததும் அவரின் பரந்த மனதை எடுத்துக்காட்டியது அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் பொது மக்களிற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கஞ்சாவுடன் கைதானவர் பிணையில் விடுவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் தென்மராட்சி கெற்பேலி பகுதியில் வைத்து 32 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைதான நபர் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு வழக்குத் தவணையிடப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (7-5-30)

## கோண்டாவில் பகுதியில் வாள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் வாள் வெட்டுக்குழு சந்தேக நபரின் வீட்டில் இருந்து இரண்டு வாள்களை மீட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் வாள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் குறித்த வீட்டினை பொலிஸார் முற்று கையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன் போது வீட்டினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்த இரண்டு வாள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 18 வயதான சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(7-5-18-33-104)




## சிறந்த இறை சேவகனை அனைவரும் இழந்துவிட்டோம்

### அங்கஜன் அனுதாபம்

சிறந்த இறை சேவகனை நல்லூர்க் கந்தன் மட்டுமன்றி நாம் அனைவருமே இழந்து விட்டோம் எனப் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக இறை சேவையாற்றிய மதிப்பிற்குரிய குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ மாப்பாண முதலியாரின் மறைவு குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அவரது இரங்கல் செய்தியில்,

தனது 92 ஆவது வயதில் இறைபதமடைந்திருக்கும் இறை சேவகர் மாப்பாண முதலியார் தனது வாழ்நாளில் பெரும் பங்கை இறை தொண்டிற்காக அர்ப்பணித்த மகான். அன்பிற்கு இலக்கணமாய், பண்பிற்கு எடுத்துக்காட்டாய், எதிர்கால சந்ததிக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று. அவரின் இழப்பு நல்லூர் தேவஸ்தானத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பேரிழப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-5-30)

## பெற்றோல் குண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதனால் வீட்டின் முன் பகுதியில் தீப்பிடித்த நிலையில் வீட்டில் இருந்தவர்களால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7-5-33)

## மாப்பாண முதலியாரின் இழப்பு உலகத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

### யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத்தின் தலைமை நிர்வாகி குமாரதாஸ மாப்பாண முதலியார் இயற்கை எய்திய செய்தி உலகம் வாழ் தமிழ் மக்களுக்கு கவலை தரும் செய்தி. அவரது வாழ்வும் அவ் வாழ்வில் அவர் கடைப்பிடித்த நெறிமுறையும் யாழ்ப்பாண தமிழ்ர்களின் வரலாற்றை எழுதும் போது தனித்தன்மை மிக்க அடையாளமாகத் திகழும். தமிழர்கள் தங்கள் தாய்ப்பூமியின் தலைநகராக யாழ்ப்பாணத்தையும் அதன் இதயமாக நல்லூரையும் கொண்டாட விளையும் மற்றும் ஆவணப்படுத்தும் எண்ணங்களுக்கு சொல்லிலும் செயல் பெரிது என பல செயற்கரிய செயல்களை ஆற்றியவர் மாப்பாண முதலியார் என யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

தன் முடிவுகளை எவருக்காகவும் விட்டுக்கொடுக்காத தலைமைத்துவ ஆற்றல் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. அவ் ஆற்றல் வாய்ந்த தலைவரின் பின்பற்றுநர்களாக இருக்கும் வாய்ப்பும் இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இவ்விரண்டையும் யதார்த்தமாக்கிய வாழ்வியல் நல்லைக் கந்தன் ஆலயத்தில் நிகழ்ந்தேறியது. முருகனின் கட்டளைப்படி காரியங்கள் ஆற்றுகின்றேன் எனும் ஒற்றை முடிவுடன் பல செயல்களைச் செய்த பெருமகன் குமாரதாஸ மாப்பாண முதலியார்.

தூரநோக்குச் சிந்தனையுடன் அவர் நல்லூர் ஆலயத்தை மையப்படுத்தி ஆற்றிய பல காரியங்கள் ஈழத்தமிழர்கள் வரலாற்றின் அடையாளங்களாக என்றும் பேசப்படும். தமிழர்களின் தனித்துவ அடையாளமாக முன்னைய இராசதானி நல்லூரை மாற்றிய பெருமானின் பெருவாழ்வை வியந்து அவரது பிரிவால் துயருற்று உலகம் வாழ் யாழ்ப்பாணத் தமிழர்கள் சார்பில் எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம் என அவ் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகக் கவசத்தில் மோசடி; பந்துலவிற்கு எதிராக புகார்



(கொழும்பு)

இலங்கையின் உள்ள பல அரச நிறுவனங்களில், முகக்கவச விற்பனையில் நடக்கும் மோசடி தொடர்பில், அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விடயத்தை நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் மூலமாக விநியோகிக்கப்படும் ஒவ்வொரு முகக்கவசத்திற்கும் இரண்டு ரூபாய் நிதி வரவு வைத்து அதில் மோசடி செய்வதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகக்கவச மோசடி தொடர்பான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாகவும், அது தொடர்பான அனைத்து ஆதாரங்களுடன் புகார் அளித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

# முதலை இழுத்துச்சென்ற சடலம் அடையாளம் காணப்பட்டது



(கொழும்பு)

தியவன்னா ஓயாவில் நேற்று முன்தினம் மாலை முதலையினால் இழுத்துச் செல்லப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த நபர் இராஜகிரிய - ஒபேசேகரபுர பகுதியைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹானை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5)

# மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை ஆரம்பியுங்கள்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான நீண்ட தூர பேருந்து சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே குறித்த சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகள் தடைப்பட்டமையால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.(4-5)

## குணமடைவு 468

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 468 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 97 ஆக அதிகரித்துள்ளது. (4-5)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி.

## இராஜேஸ்வரி செல்லத்துரை

பிறப்பு: 05 08 1937

இறப்பு: 09 10 2021




வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த திருமதி. உமாராணி பிரேமச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை அவர்களின் மரணச் செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரிக் குடும்பம்

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி

தெய்வத்திரு

## இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார்

அவர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தோற்றம்: 15.01.1929

மறைவு: 08.10.2021

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 19 04 1934

உதிர்வு 11 09 2021



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் அமரர் ஞானச்சந்திரமூர்த்தியின் துணைவியார்

## அமரர்.திருமதி. கண்மணியம்மா ஞானச்சந்திரமூர்த்தி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று 11.10.2021 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (6196)

"முத்தகம்"
வழுக்கம்பரை, பண்ணாகம்.

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



திருமதி. ஜெயலட்சுமி ஞானப்பிரகாசம்

பிறப்பு: 20.10.1931

இறப்பு: 06.10.2021

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரியுமாகிய ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் துணைவியார் திருமதி. ஜெயலட்சுமி ஞானப்பிரகாசம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5197)

276, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சமூக அபிவிருத்தி மன்றம்.

# “ஒரு நாடு இரு அமைப்புக்கள்” கோட்பாட்டின் கீழ்

# சீனாவுடன் தாய்வான் இணைக்கப்பட வேண்டும்

**(பீஜிங்)**

**சீனா மற்றும் தாய்வான் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்து வரும் சூழலில் தாய்வான்-சீனா மறு இணைப்பு நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.**





சீனாவின் கடைசி முடியாட்சி 1911 ஆம் ஆண்டு நீக்கப்பட்டதன் 110 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி பீஜிங்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்ச்சியிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒற்றுமையைப் பாதுகாப்பதில் சீனாவின் வல்லமை மற்றும் உறுதியினை யாரும் குறைத்து மதிப்பிடக் கூடாது என்றும் எச்சரித்துள்ளார்.

தாய் நாட்டுடன் முழுமையான மறு இணைப்பு எனும் வரலாற்று நடவடிக்கை நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் ஹொங்கொங்கில் இருப்பதைப் போல “ஒரு நாடு இரு அமைப்புக்கள்” எனும் கோட்பாட்டின் கீழ் சீனா மற்றும் தாய்வான் இடையிலான ஒருங்கிணைப்பு நடக்க வேண்டும் எனவும் ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

தற்போது தாய்வானை சீனாவுடன் இணைப்பதற்கு தாய்வான் விடுதலைப் படைதான் மிகப் பெரிய தடைக் கல்லாக உள்ளது எனத் தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் தாய்வான் மற்றும் சீனா இடையே உரசல்கள் அதிகரித்துள்ள சூழலில் இத்தகைய கருத்தினை ஷி ஜின்பிங் வெளியிட்டுள்ளார். இதற்கு பதில் அளித்த தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வைன்,

தனது மக்கள் சீனாவின் அழுத்தத்திற்கு அடிபணிய மாட்டார்கள் என்று தெரிவித்தார். மேலும் தீவின் பாதுகாப்பை தொடர்ந்து உறுதிப்படுத்துவதாகவும் அதன் ஜனநாயக வாழ்க்கை முறையை பாதுகாப்பதாகவும் உறுதியளித்துதுள்ளார்.

அத்துடன் நாம் எவ்வளவு அதிகமாக சாதிக்கின்றோமோ அவ்வளவு பெரிய அழுத்தத்தை சீனாவிலிருந்து எதிர்கொள்கிறோம் என நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட தாய்வானின் தேசிய தின உரையில் கூறினார். (7-5)

# படைகளை வெளியேற்றிய பின்னரான தலிபான் - அமெரிக்காவின் சந்திப்பு



(காபூல்)

அமெரிக்கா தனது படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றிய பின்னர் அமெரிக்க அதிகாரிகள் ஆப்கானை ஆளும் தாலிபானை சந்தித்து முதல் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

சிரேஷ்ட தலிபான் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் தங்கள் நாடுகளின் உறவில் “ஒரு புதிய பக்கத்தைத் திறப்பது” பற்றி விவாதித்தார்கள்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கட்டார் தலைநகர் டோஹாவில் தொடங்கிய தனிப்பட்ட சந்திப்புகள், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய பிறகு இடம்பெற்ற முதல் சந்திப்பாகும். ஆப்கானிஸ்தானின் மத்திய வங்கியின் இருப்பு மீதான தடையை நீக்குமாறு ஆப்கானிஸ்தான் தூதுக்குழு அமெரிக்காவிடம் இந்த கலந்துரையாடலின் போது கோரியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் கொவிட்-19 இற்கு எதிரான ஆப்கானிஸ்தான் மக்களுக்கு தடுப்பூசிகளை அமெரிக்கா வழங்கும் என்றும் இதன்போது தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து தலிபான் குழு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளனர். (7-5)

# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு; ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்றது



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள குந்தூஸ் மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மேலும் 100 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ கூட்டுப்படைகள் வெளியேறிய பின்னர் அங்கு நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட இந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (7-5)

# லெபனான் நாடு இருளில் மூழ்கியது

(பெய்ரூட்)

பொருளாதார சிக்கலில் தவித்துவரும் லெபனான் நாட்டில் தற்போது மின்சார உற்பத்தி முற்றிலும் நின்று போனது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாட்டின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையங்களான டெய்ர் அம்மர், ஜஹ்ரானி ஆகிய இரண்டும் இயங்குவது நின்றதாக ரொய்டர்ஸ் செய்தி முகாமையிடம் அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதையடுத்து மின் தொகுப்பு “சனிக்கிழமை நண்பகலில் முற்றிலும் நின்றுபோனது” என்றும் மேலும் பல நாட்களுக்கு இது மீண்டும் செயற்பட வாய்ப்பில்லை என்றும் அவர் கூறினார்.

கடந்த 18 மாதங்களாக லெபனான் தீவிரமான பொருளாதார சிக்கலில் தவித்து வருகிறது.

இதனால், மக்கள் வறுமையில் வாடுகின்றனர். அந்நாட்டின் பணம் மதிப்பிழந்துள்ளது. அரசியல் தலைவர்களுக்கு எதிரான பெரிய போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக வெளிநாட்டு எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு பணம் தர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (7-5)



நல்லூர் கந்தசுவாமி ஆலய அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் ஆத்மா இறைதிருவடி சேரப் பிரார்த்தனை செய்து இந்தியா தில்லை சிதம்பரம் ஆலய தெற்கு கோபுரத்தில் மோட்ச தீபம் ஏற்றப்பட்டுள்ளது.

(படம் : சிவசாந்தன்)

# வவுனியா ஓமந்தையில் வாகன விபத்து;ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா - ஓமந்தை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துப் பற்றி மேலும் தெரியவருவதாவது, நெடுங்கேணியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஓமந்தைப்பகுதியில் சென்று கொண்டிருந்த போது வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன்



மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணை ஓமந்தைப் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (7-5-299)

# கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக மூடப்பட்ட வவுனியா நகர பள்ளிவாசல்

## சுகாதாரப் பிரிவினர்

(குருமன்காடு)

வவுனியா நகர பள்ளிவாசல் கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக சுகாதாரப் பிரிவினரால் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. வவுனியா நகர பள்ளி வாசலில் வெள்ளிக்கிழமை தொழுகைக்காக பலர் ஒன்று கூடியுள்ளதாக சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை சுகாதாரப் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பள்ளிவாசலில் ஒன்று கூடியிருந்தவர்களின் விபரங்கள் பெறப்பட்டு, அவர்கள் எச்சரிக்கையின் பின் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதுடன், பள்ளிவாசல்களின் வாயில்கள் மூடப்பட்டு, பள்ளி நிர்வாகத்தினருக்கும் சுகாதார விதிமுறைகளை மீறியமை தொடர்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் குறித்த பள்ளிவாசலுக்கு சென்ற சுகாதாரப் பிரிவினர் "கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் நடமாட்டம் பள்ளிவாசல் எல்லைக்குள் கூடுதலாக காணப்பட்டமையால் கொவிட் -19 கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக மறு அறிவித்தல் வரை இப் பள்ளிவாசல் மூடப்படுகிறது" எனத் தெரிவித்து பிரதான வாயிலில் பதாகை ஒன்றினை ஒட்டியுள்ளனர்.

அத்துடன், குறித்த தினத்தில் ஒன்றுகூடியவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (7-5-250)

# நீர்ப்பம்பியின் மீது மோதி கப்ரக வாகனம் விபத்து



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று கப்ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானது.

கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த கப்ரக வாகனம் நிறுத்த முற்பட்ட வேளை அருகில் இருந்த நீர்ப் பம்பியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் கப்ரகவாகனத்தில் பயணித்த மூவர் சிறுகாயங்களுக்குள்ளானர். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-5-100-316)

# இணையவழி கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 05 நிகழ்வு ஐப்பசி மாதம் 11,12, 13,14 ஆகிய திகதிகளில் இரவு 7.30 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647 334 8261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (7-5)



இராணுவ தினத்தை முன்னிட்டு இரணைமடுவில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலையில் குருதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 100 இற்கு மேற்பட்ட படையினர் குருதிக் கொடை வழங்க முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படம்:-சப்தசங்கரி, தேவாநந்தன்)

# எனது சட்டமூலத்தை உபயோகித்து மாகாணசபை தேர்தலை நடத்தலாம்

## சுமந்திரன் எம்.பி

(நெளுக்குளம்)

என்னுடைய சட்டமூலத்தை உபயோகித்து ஒரு சட்ட திருத்தத்தை உடனடியாக செய்து மாகாண சபை தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் ஊடகவியலாளர்கள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் முறை தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற தெரிவுக்குழு தேர்தல் முறை மறுசீரமைப்பு பற்றிய கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதனை நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். அதை நகர்த்துவதில் உள்ள சட்ட சிக்கல்கள் சம்பந்தமாக ஒவ்வொரு தடவையும் பிரஸ்தாபிக்கப்படும். ஆனாலும் ஒரு சிறிய சட்ட திருத்தத்தின் மூலமாக முன்னர் இருந்த தேர்தல் முறையையே பின்பற்றி தேர்தல் நடத்த முடியும் என்ற கருத்தை நான் வெளிப்படுத்தியிருந்தேன்.

அதற்கான ஒரு சட்ட மூலமும் 2019 ஆம் ஆண்டு நான் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்தேன். அதன் அடிப்படையில் இது செய்யப்படலாம் என்று கருத்து கூறிய போது சட்டமா அதிபருடைய ஆலோசனை பெறப்பட்டது. இறுதியாக சட்டமா அதிபரும் அந்த முறையிலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

நான் தயாரித்திருந்த சட்ட மூலத்தை தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன செயலாளரிடம் கொடுத்திருக்கின்றேன்.

அமைச்சரவை இது குறித்து ஆலோசித்து ஒரு முடிவெடுத்து அப்படி செய்வதாக இருந்தால் வருகின்ற நாட்களிலே அதனை வர்த்தமானியில் பிரசுரித்து ஒரு அரசாங்க வரைபாக சட்டமூலமாக அதனை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார் (7-5-299)

# பவளவிழாக் காணும் கணேச சனசமூக நிலையம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையம் 75 ஆண்டுகளை நிறைவுசெய்து பவள விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்தவேளையில் எமது வரலாற்றுப் பக்கங்களை சற்றுப் புரட்டிப் பார்க்கத் தலைப்பட்டுள்ளோம். கிராமங்களின் சமூக வளர்ச்சியின் பின்னால் அந்தந்தக் கிராமங்களின் சனசமூக நிலையங்கள் நிற்கின்றன. அதேபோல் புன்னாலைக் கட்டுவன் மக்களின் வளர்ச்சியில் கணேச சனசமூக நிலையத்தின் பங்கு அளப்பரியது.

1946 ஆம் ஆண்டு விஜய தசமி தினத்தன்று (1946. 10.10) கணேச சனசமூக நிலையம் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்று முதல் இன்று வரை எமது நிறுவனத்தினால் கொண்டு நடத்தப்பட்ட சேவைகளாக பத்திரிகைப் பகுதி, நூலகப் பகுதி, முன்பள்ளி, வானொலிப் பெட்டிச் சேவை, விளையாட்டுக்கழகம், மாலை நேர வகுப்புக்கள், சிரமதான முயற்சிகள், மருத்துவ முகாம்கள், வீதிப் புனரமைப்பு, பாராட்டு விழாக்கள் மற்றும் கலை இலக்கிய விழாக்கள், மயான நிர்வகிப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

பத்திரிகைப் பகுதியில் தினகரன், வீரகேசரி, ஈழநாடு, **Times of Ceylon** முதலான பத்திரிகைகள் 1946 ஆம் ஆண்டு முதல் கிரமமாகப் போடப்பட்டு வந்தன. இன்று வலம்புரி, தினக்குரல், உதயன் போன்ற பத்திரிகைகள் வாசகர்களுக்காக தினசரி வழங்கப்படுகின்றன. குறிப்பாக இலங்கையில் வார, மாத இதழ்களை பெறமுடியாத போதும் இந்தியாவில் இருந்து நேரடி சந்தா மூலம் குமுதம், ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் போன்ற இதழ்களையும் வாசகர்களுக்காக வழங்கிய பெருமை எமது பத்திரிகைப் பகுதிக்குண்டு. இன்றளவும் இப்பகுதி தனக்கென தனியான வாசகர் குழாத்தைக் கொண்டு இயங்கி வருகிறது.

எமது நூலகம் தமிழகத்திலிருந்து சங்க இலக்கிய நூல்கள், நாவல்கள், கலைக்களஞ்சியம் முதலான பெறுமதி மிக்க நூல்களைக் கொள்வனவு செய்து நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் தூதரகங்களின் அன்பளிப்பு மூலம் வெளிநாடுகளில் இருந்து பிறமொழி நூல்களும் கிடைக்கப்பெற்றன.

இன்றைய நிலையில் வாசகர்களின் ஈடு பாடின்மையும் பெறுமதிமிக்க நூல்களின் சிதைவும் எமது நூல் நிலையப் பயன்பாட்டை கணிசமான அளவு குறைத்துள்ளது.

எமது சனசமூக நிலையம் மிகச்சிறப்புடன் இயங்கி வந்தமையால் ஸ்தாபிக்கப்பட்டு ஓராண்டு காலத்திலேயே A தர சனசமூக நிலையமாக 1947 இல் தரமுயர்த்தப்பட்டது.

இதன் மூலம் அரசு வானொலிப்பெட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது. அந்தக் காலத்தில் பல கிராமங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து இந்தச் சேவையைப் பெற்றுச் சென்றனர்.

எமது சனசமூக நிலையம் விளையாட்டுச் செயற்பாடுகளிற்கும் தனது கணிசமான பங்களிப்பை வழங்கியது. 1975 ஆம் ஆண்டில் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக்கழகமாக உருவாக்கப்பட்டு தனியாக இயங்கி வருகிறது.

2000.01.19 அன்று எமது நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 2000 ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு முதல் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது. இன்றுவரை அதே கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இன்றுவரை எமது சனசமூக நிலையத்தினால் வீதிப் புனரமைப்பு, பொதுக்கிணறு அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல், மயான நிர்வகிப்பு மற்றும்பராமரிப்பு போன்ற சமூக உட்கட்டுமானப் பணிகளும் கல்வி கற்கும் மாணவர்களுக்கான முன்பள்ளி வகுப்புக்கள், மாலைநேர வகுப்புக்கள் போன்றனவும் சிரமதானம், சமூக சேவையாளர்களின் கௌரவிப்பு, சிறந்த பெறுபேறு பெறும்மாணவர்களுக்கான கௌரவிப்பு போன்ற சமூக ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் இடர் காலங்களில் மக்களின் நலனோம்பு செயற்றிட்டங்களான வெள்ள நிவாரணம், கொவிட் நிவாரணம், சுகாதாரப் பணியாளர்களுக்கான அனுசரணை என்பவற்றையும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் செய்து வருகிறது.

தொடர்ந்தும் புன்னாலைக் கட்டுவன் மக்களின் நலனில் கணேச சனசமூக நிலையம் அக்கறையோடு நூறாண்டுகளைத் தாண்டியும் பயணிக்கும்.

**திரு.ப.தர்சனன்**
**பொருளாளர்,**
**கணேச சனசமூக நிலையம்.**

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



## நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி 5 ஆம் நாள்



மும்மூர்த்திகளின் முகங்களில் இருந்து வெளிப்பட்ட ஒளி, நெருப்பைப்போல் வெளிவந்தது. அது ஒரு பெண்வடிவம் ஆயிற்று. அந்தப்பெண் துர்க்காதேவி என அழைக்கப்பட்டார்.

ஒன்பது நாள் விரதம் இருந்து ஆயுதபூஜை செய்து பத்தாம் நாள் வளையலணிந்த கைகளில் வாள்பிடித்து போய் மகிஷனை கொன்று மகிஷாசுரமர்த்தினியாக திரும்பி வந்தாள்.

தேவி விரதம் இருந்த தினங்களை நவராத்திரி என்கிறார்கள். அசுரனை ஜெயித்த தினம் விஜய தசமி. துர்க்கை பூஜை ஒன்பது நாட்களும் செய்து பத்தாவது தினம் ஊர்வலமாக எடுத்து சென்று கடலிலோ, நதியிலோ கரைத்து விடுவார்கள்.

தமிழ்நாட்டில் நவராத்திரியன்று கொலு பொம்மை வைத்து பத்து தினமும் மகிழ்ச்சியாக கொண்டாடுகின்றனர்.

ஒன்பது நாட்களும்பூஜை செய்ய முடியாதவர்கள் கடைசி மூன்று நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி நாட்களில் பூஜை செய்தால் ஒன்பது நாட்களும் பூஜை செய்த பலனை அடைவார்கள். (தொடரும்)

# ஜனாதிபதியும் பங்காளிகளும் இவ்வாரம் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இவ்வாரம் இடம்பெறவுள்ளது.

கெரவலபிட்டிய மின்நிலையம் விவகாரம், மாகாண சபை தேர்தல், தற்போதைய அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் இச்சந்திப்பின் போது கவனம் செலுத்தப்படவுள்ளன என பங்காளி கட்சியின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 140 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 160 |
| தக்காளி | 80 | 90 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 140 | 140 | 160 |
| கரட் | 100 | 160 | 140 | 160 |
| பூசணி | 80 | 70 | 60 | 60 |
| புடோல் | 120 | 140 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 100-150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 320 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 160 | 120 |
| பயற்றங்காய் | 380 | 300 | 300 | 320 |
| லீக்ஸ் | 140 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 200 | 220 | 150 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 160 | 240 |
| போஞ்சி | 200 | 350 | 350 | 360 |
| கத்தரிதம்புள்ள | 150 | 170 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 30 | 60 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-70 | 50-70 |
| இராசவள்ளி | - | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 350 | 350 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 20 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | -- | -- |

# திருக்குமரன் நடேசனுக்கு மீண்டும்

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிய மைச்சர் நிருபமா ராஜ பக்ஷவின் கணவரான திருக்குமரன் நடேச னுக்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மீளவும் அழைப்பு விடுத்துள் ளது.

சர்ச்சைக்குரிய பண்டோரா ஆவண ங்கள் தொடர்பாக மேலதிக வாக்கு மூலம் ஒன்றை பெற்றுக் கொள் வதற்காக, எதிர்வரும் வெள்ளிக் கிழமை ஆணைக்குழுவில் மீள வும் முன்னிலையாகு மாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமையும், திருக்கும ரன் நடேசன் ஆணை க்குழுவில் முன்னிலை யாகி இருந்தார். இதன் போது அவரிடம் 3 மணி த்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்நிலையிலேயே திருக்குமரன் நடேச னுக்கு, ஆணைக்குழு மீளவும் அழைப்பு விடு த்துள்ளது. (4-5)

# இராணுவ தினத்தை முன்னிட்டு இராணுவத்தினருக்கு பதவி உயர்வு



(கொழும்பு)

இலங்கை இராணு வத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு தின த்தை முன்னிட்டு நேற்று 567 இராணுவ அதி காரிகள் மற்றும் 10, 369 படை வீரர்கள் தரமுயர த்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படைக ளின் பிரதம அதிகாரி யும் இராணுவத் தளபதி யுமான ஜெனரல் சவேந்திர சில் வாவின் பரிந்துரைக்கு அமை வாக ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவினால் இந்த தரமுயர்வு வழங் கப்பட்டுள்ளது. (4-5)

# கொரோனாவை மறந்து செயற்படும் மக்கள்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் கொவிட் தொற்றை மற ந்து செயற்படும் நிலை மையைக் காண முடி வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் கமல் பெரேரா தெரி வித்துள்ளார்.

இன்று சிலர் தங் களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை முழுமை யாகப் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலையை பார்க்க முடிகின்றது.

கொவிட் தொற்றினை மறந்துவிட வேண்டாம். இன்றும் 600 கொவிட் தொற்றாளர்கள் அடை யாளம் காணப்படுகின் றார்கள். இந்த நிலை மையைக் கட்டுப்படுத்து வதற்கு சுகாதாரப் பிரிவி னர் மிகவும் போராடு கின்றார்கள்.

மக்கள் இந்த நேர த்தில் பொறுப்புடன் செய ற்பட வேண்டும். சரி யான முறையில் முகக் கவசம் அணிந்து பய ணிக்க வேண்டும். சமூக இடைவெளியை பின் பற்ற வேண்டும். 'கொவிட் தொற்று முடிவுக்கு வந்து விட்டதென நினைத்து செயற்பட்டால் டிசெம்பர் மாதமளவில் மற்றுமொரு அலை ஏற்படும் அபாயம் உள்ளதென அவர்மேலும் தெரிவித்துள்ளார். (4-5)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மூன்று பிரிவுகளின் கீழ் முத்திரைகளை வெளியிடும் நிகழ்வு பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

# இன்று ஒரு தகவல்

## மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுவது எப்படி?

மனித இனத்திற்கே சாபக்கேடாக விளங்குபவை தற்புகழ்ச்சியும் முகஸ்துதியுமேயாகும்.

மனிதன் என்றால் அவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறான்; அல்லது மற்றவர்கள் தன்னைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

இரண்டும் சமுதாயத்தில் ஊறிப்போய் விட்ட விடயங்கள். தற்புகழ்ச்சி தவறானது என்பது அனைவரும் அறிந்த ஒன்று, முகஸ்துதி என்பது மற்றவர்கள் மனப்பூர்வமாகப் பாராட்டாமல் வெறும் உதட்டளவில் பாராட்டுவது, எனவே இதுவும் தவறானது.

ஆனால் மற்றவர்களின் நன்மதிப்பைப் பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே, அது தவறானதல்ல, வரவேற்கக் கூடியது.

நாடகத்தில் ஒரு மன்னனைப் போல வேடம் போட்டவன் உண்மையில் ஒரு மன்னனாகி விட முடியுமா?

மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக ஒருவன் போலியான செயல்களைச் செய்துவர, அவனைப் பலரும் பாராட்டும் செயல் எத்தனை நாட்களுக்கு நடக்கும்? ஒரு நாள் முகமூடி கிழிந்து விடாதா?

அந்த நாடக நடிகன், மேடையை விட்டு இறங்கிய பின்னர் பொதுமக்கள் அல்லது கூட நடித்த துணை நடிகர்கள் கூட 'மன்னா!' என்று அழைக்கமாட்டார்களே!

அப்படியானால், உண்மையாகவே மற்றவர்களின் நன்மதிப்பைக் பெறும் முறை தான் என்ன?

"என்னை நீ மதிக்கவில்லை. அதனால் நானும் உன்னை மதிக்கமாட்டேன்" என்று நாம் செயற்படுவதால் ஒரு நாளும் நமது மதிப்பு உயர்ந்து விடாது. அவர்களே வலிய வந்து மதிப்பளிக்கும் வகையில் நாம் நடந்துகொள்ளவேண்டும். ஊருக்கெல்லாம் நல்லவனாக இருந்து மனசாட்சிக்குக் கெட்டவனாய் ஒருவன் இருப்பானேயானால் அவனை உலகம் மதித்தாலும் உள்ளுணர்வு அவனை மதிக்காது.

பணமே அவனை மதிக்காத நிலையில் வெளிமதிப்பு எவ்வளவு கிடைத்தாலும் ஒருவனால் அதை எண்ணி மகிழ்ச்சியடைய முடியாது.

ஆக, "நம் மனசாட்சியே நம்மை மதிக்குமளவிற்கு நாம் நடந்து கொள்ள வேண்டும்."

மனசாட்சியை நாம் ஏமாற்ற முடியாது என்பதால், நாம் நல்ல குணங்களையும், பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டே ஆகவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

கர்வத்தை விட்டுவிட்டு, மற்றவர்களுடன் அன்புடன் பழகி, அவர்களுக்கு உதவி செய்து, அடக்கத்துடனும் பண்புடனும் நாம் பழக ஆரம்பித்து விட்டோமேயானால் – பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்வது போல, பிறருடைய நன்மதிப்பு அனைத்தும் நம்மை நாடி வந்து சேரும்!

லேனா தமிழ்வாணன்




## ஆமையும் அழகிய பெண்ணும்



உடனே மக்கள் அதிகம் கூடும் சந்தைப் பகுதிக்கு அந்த ஆமைக் குடும்பத்தினை இழுத்து வரும்படி தன் படைத் தளபதிக்குக் கட்டளை இட்டான்.

படைத் தளபதியும் தன் வீரர்கள் சிலருடன், ஆமைக் குடும்பத்தை இழுத்து வரப் புறப்பட்டுச் சென்றான்.

நாட்டின் மக்கள் எல்லோரும், அதற்குள் செய்தி அறிந்து சந்தைப் பகுதியில் கூட்டமாகச் சேர ஆரம்பித்து விட்டனர்.

இளவரசனோ இரு தலைக் கொள்ளி எறும்பாகத் துடிக்க ஆரம்பித்தான். ஆமை அழகியையும் அதன் குடும்பத்தினரையும் நிச்சயம் கொன்று விடுவார்கள் என்று வருந்தத் தொடங்கினான்.

மன்னனோ எந்தவிதச் சலனமும் காட்டாமல் இருந்தான். படைத் தளபதியும் வீரர்கள் சிலரும் ஆமைக் குடும்பத்தை இழுத்து வந்தனர். என்ன ஆச்சர்யம்!

ஆமை அழகியின் அழகு எல்லோரையும் மயங்கச் செய்வதாய் இருந்தது. இப்படி ஓர் அழகி இந்த நாட்டில் இருந்தாளா என்று மக்கள் தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

சிலரோ, இந்த அழகிய பெண் இவ்வளவு நாள் எங்கே ஒளிந்திருந்தாள் என்று வாய் விட்டே, பலரும் கேட்கும்படிக் குரல் எழுப்பினர்.

அதில் பல குரல்கள் வயிற்று எரிச்சலாய் தெரித்து விழுந்தன. மன்னன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

கொடுமைக்கார மன்னனான அவன் தன் முன்னால், படைத் தளபதி கொண்டு வந்த நிறுத்திய ஆமையின் மகளைப் பார்த்தான்.

அவனுக்கும் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது.

(தொடரும்)

# மகாபாரதம்

210



பகையான எலியின் வார்த்தைகளில் மகிழ்ந்த பூனை எலிக்கு நன்றி கூறியது. எலியைப் போல பூனையும் வஞ்சனையுடையது.

எனவே சாமர்த்தியமாகப் பேசியது. “எலியே.. உன் பேச்சு அழகாய் உள்ளது. நீ கூறியபடி என்னைச் சீக்கிரம் விடுதலை செய். என்னைப் போல நீயும் பெரிதும் துன்புறுகிறாய்.

இது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. நம் காரியம் நிறைவேற ஒரு உடன்பாட்டிற்கு வருவோம். நான் இதிலிருந்து விடுபட்டால் உனக்கு உதவுவேன்” என்றது.

உடன் எலி “பூனையாரே! இனி என் பயம் தொலைந்தது. தாங்கள் வளையிலிருந்து விடுபட்டதும் என்னைக் கொன்று விடக்கூடாது. தவிர்த்து கோட்டான், கீரி ஆகியவற்றிடமிருந்தும் என்னைக் காக்க வேண்டும்” என்று கேட்டது.

பூனை “என் உயிர் நண்பனே.. உன்னால் தான் நான் பிழைக்கப் போகிறேன். இன்னும் என்னால் ஏதேனும் ஆக வேண்டுமாயின் ஆணையிடு. செய்கிறேன். இனி நான் உன் நண்பன் அல்லவா?” என்றது.

பூனையின் ஆறுதலைக் கேட்ட எலி.. நட்புமுறையில் பூனையுடன் பழக ஆரம்பித்தது. அதன் மார்பின் மீது தவழ்ந்து விளையாடத் தொடங்கியது. இது கண்டு கோட்டானும், கீரியும் தம் எண்ணம் ஈடேறாததால் வேறிடம் சென்றன.

இடம், காலம் தெரிந்த எலி கயிற்றை மெதுவாகக் கடிக்கத் தொடங்கியது. பூனையோ.. “ஏன் வலையை தாமதமாக அறுக்கிறாய்.. சீக்கிரம் அறுத்து விடு” என்றது.

உடன் எலோ.. “எந்த வேலையை எப்போது செய்ய வேண்டும் என நான் அறிவேன். இப்போது உம்மை விடுவித்தால் என்னையே கூட கொன்றிடுவீர்.

தக்க சமயத்தில் வலை விரித்தவன் வரும்போது வலையை அறுப்பேன். அப்போது உடனே நீங்கள் மரத்திற்குத் தாவி போய் விடலாம், நானும் வளைக்குள் போய் விடுவேன்.

அப்படிப்பட்ட அவசர நிலையில் தான் நானும் தப்பிக்க முடியும்.

(தொடரும்)

செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான்;
செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.
– பேர்னாட்ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்னவர் ஏறி விழுந்த குதிரையில் புதிய ஆளுநர் சவாரி செய்வாரா?

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கின் புதிய ஆளுநர் நாளை மறுதினம் (13) புதன்கிழமை தனது கடமையைப் பொறுப் பேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஆளுநராக இருந்த திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேறு பதவிக்கு நியமிக் கப்படவுள்ளதான தகவல்களும் உண்டு.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் ஒரு தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தரப்புகள் முன்வைத்த நிலையில், வடக்கு மாகாணத்துக்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிப்பதை ஆட்சியாளர்கள் பின்பற்றுவது தெரிகிறது.

எனினும் வடக்கின் ஆளுநர்கள் வரிசையில் ஜி.ஏ.சந்திரசிறி தனித்துவமான அதிகாரங்களுடன் செயற்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ஆளுநராக இருந்த பலிகக்கார மற்றும் றெஜினோல்ட் கூரே ஆகியோர் ஓரளவுக்கு நிர்வாக விடயங்களில் அவதானமாக இருந்தனர்.

அதிலும் ஆளுநராக இருந்த பலிகக்கார சிறந்த நிர்வாகியாகவும் நடுநிலையாளராகவும் அறியப்பட்டாலும் வடக்கின் ஆளுநர் ஒரு தமிழராக இருக்க வேண்டும் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கை வலுவடைந்த நிலையில் இருந்ததன் காரணமாக பலிகக்கார தனது நிர்வாக ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் போக, அவரின் இடத்துக்கு றெஜினோல்ட் கூரே நியமிக்கப்பட்டார்.

ஓரளவுக்கு தமிழ் பேசத் தெரிந்தவரான கூரே தென்னிலங்கை அரசியல் நீரோட்டத்தில் அடிபட்டுக் கரையொதுங்கிவர் என்பதால் அவரின் பேச்சும் செயலும் உடன்பட்டுப் போவதில் பெரும் திண்டாட்டம் கண்டது.

அதனைத் தொடர்ந்து சுரேன் ராகவன், திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் தமிழர்கள் என்ற பேரால் நியமிக்கப்பட்டிருந்தாலும் பௌத்தத்தை கற்றறிந்த தமிழர் என்பதால் சுரேன் ராகவன் வடக்கின் ஆளுநராகும் தகைமையைப் பெற்றுக் கொண்டார்.

இதேபோல் திருமதி சார்ள்ஸ் அவர்கள் மீதான ஆளுந் தரப்பின் நம்பிக்கையும் விசுவாசமும் அவரை ஆளுநர் பதவியில் அமர்த்தியதாயினும் சுவிஸ் நாட்டில் இருந்து வட பகுதிக்குக் கொரோனாத் தொற்றைக் கொண்டு வந்த போதகர் சற்குணம்; யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரிகளுக்கு லஞ்சம்கொடுத்தே வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார் என ஆளுநர் திருமதி சார்ள்ஸ் கூற, அதுவே அவரின் பதவிக்கு ஆப்பு வைப்பதாக ஆகிவிட்டது.

இந்நிலையில், ஜீவன் தியாகராஜா வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் செயற்பாடுகள் எப்படியிருக்கும் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

## வவுனியாவில் ஐவர் உட்பட
## வடக்கில் 14 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நேற்று 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 116 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில்,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 5 பேர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2 பேர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 3 பேர்.

முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஞா)

## மருத்துவக் குறிப்பு

கண்களில் நீர் வழிந்தால் சுத்தமான பன்னீரினால் கண்களைக் கழுவ சீக்கிரம் குணம் தெரியும். வல்லாரை சாப்பிட காசநோய் அகலும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரதீவு, குறிகாட்டுவான், மடத்து வெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** தரணிக்குளம், குருக்கள் புதுக்குளம்-மணியர்குளம், புதுக்குளம், ஆண்டியப் புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (4-5)

## நவராத்திரி பாமாலை



வெண்ணிற ஆடை உடுத்தி இருப்பாள்
வெண்டாமரையில் அமர்ந்து இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கூறு பாவலர் உள்ளத்தில் இருப்பாள்

ஓதும் வேதத்தின் உள் இருப்பாள்
ஓலைச்சுவடி கையில் வைத்திருப்பாள்
மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் இருப்பாள்

கல்வி தனை அள்ளி வழங்கி
கவிஞர் கவியில் கலந்து இருப்பாள்
கொள்ளை இன்பம் கொண்டு
கொஞ்சும் மழலை பேச வைப்பாள்

மதிவர்ணன் சுபிகா
தரம்-**08 B**,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

### உயிரில் கலந்த வாணியின் மகிமை

அகிலம் வாழ அருள் புரிபவள் வாணி
ஆறுதல் தந்து அமைதிப்படுத்துபவள் வாணி
இன்னல்கள் தீர்த்து இதம் அளிப்பவள் வாணி
ஈடிணையில்லா வாழ்வு தருபவள் வாணி
உண்மை நெறியில் உயர்வு காட்டுபவள் வாணி
ஊக்கத்துடன் கல்வி பயில வைப்பவள் வாணி
எண்ணும் எழுத்தும் உணர்த்துபவள் வாணி
ஏற்றம் காண ஏணியாய் இருப்பவள் வாணி
ஐயம் தீர்த்து தெளிவுபடுத்துபவள் வாணி
ஒற்றுமையாக நாம் வாழ ஊக்கம் தருபவள் வாணி
ஓம் என்றாலே ஓடி வருபவள் வாணி
ஔவியம் பேசாது எம்மை வழிப்படுத்துபவள் வாணி
வாணி பூசையில் அவளைப் போற்றி
வரங்கள் பல பெறுவோம்

ஜெயக்குமார் பிரகாசினி
தரம்-**09 A**,
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி

**அன்பு மாணவச் செல்வங்களே!**

**நவராத்திரி பாமாலையில் உங்கள் கவிதைகள் இடம்பெற வேண்டும் எனின் உங்கள் கவிதைகளுடன் முழுப்பெயர், பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இட்டு**

**076 636 3378**

**என்ற வைபர் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### நல்ல குடும்பம்



ஒரு குடும்பம் நல்ல குடும்பமாக திகழ சில அவசியமான அறிவுரைகளை கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி. அந்த அறிவுரைகள்.

1. நாம் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்த வேண்டிய இடம் நம் குடும்பமே.
2. கணவன்-மனைவி உறவுக்கு இணையாக உலகில் வேறெந்த உறவையும் சொல்ல முடியாது.
3. குடும்ப நிர்வாகம் செய்வது உங்கள் அறிவாகத்தான் இருக்க வேண்டும். எந்த நிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக் கூடாது.
4. வரவுக்குள் செலவை நிறுத்துங்கள். அது குடும்ப அமைதியைக் காக்கும். வீண் செலவுகள் செய்ய வேண்டாம். அது குடும்ப அமைதியை சீர்குலைக்கும்.
5. ஒரு குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் பொருளீட்டும் திறன் வேண்டும். அல்லது, பெரும்பாலானோர் பொருளீட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். சிலர் அதிகமாக சம்பாதிக்கலாம். சிலர் குறைவாக சம்பாதிக்கலாம். எப்படி இருந்தாலும் அதை காப்பது, கவர்வது, பிறருக்கு இடுவது ஆகிய செயல்களில் சமமான பொறுப்பு வேண்டும்.
6. கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ, மனைவிக்குத் தெரியாமல் கணவனோ சம்பாதிப்பதும், செலவு செய்வதும், சேமிப்பதும் சரியாக இருக்காது. அது பிரச்சினைகளுக்கு இடம் தரும். மனதில் ஒளிவு மறைவு வைத்துக்கொண்டிருந்தால் தெய்வீக உறவு இருக்காது.
7. குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றால் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் ஆகியவற்றையும் கடைப்பிடித்து வரவேண்டும்.
8. பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழி வகுக்கும்.
9. தனக்கு கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறை கொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனமே இதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.
10. நல்ல குடும்பத்தில் நன்மக்கள் தழைப்பார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கும் குடும்ப அமைதி அவசியம்.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்டட ஆப்கானிஸ்தான்

15

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்






பீமரன் பேழை (கி.பி 2ம் நூற்றாண்டு)



காந்தாரத்தில் இருக்கும் புத்தர் (கி.பி 2-3 நூற்றாண்டு)



பெண் சிற்பம் குதிரை வீரன் மீன்வடிவம்
படம் 1

## பௌத்தத்தின் வீழ்ச்சி

கி.பி.715 இல் அப்பாசியக்கலீபகத்தின் ஆட்சியின் போது, ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் வாழ்ந்த பல பாரசீக பௌத்த பிக்குகள், பட்டுப் பாதை வழியாக கிழக்கு சீனத்திற்கு சென்றனர். எஞ்சியிருந்தவர்கள் இஸ்லாமிய சமயத்திற்கு கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டனர். சபரித்து வம்சம், கஜான வித்துகள் மற்றும் இறுதியில் கோரி வம்ச ஆட்சியாளர்களால், ஆப்கானிஸ்தானில் பௌத்தம் முழுவதுமாக துடைத்தெறியப்பட்டது.

## பௌத்தச்சின்னங்களின் அழிவுகள்

ஆப்கானிஸ்தானில் பௌத்த சமயத்தின் நினைவுச் சின்னங்கள் ஆயிரக் கணக்கில் இருந்தன. அவைகள் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாத இஸ்லாமிய பேரின வாதத்தினர் அழித்தனர். இறுதியாக தலிபான்கள், பாமியான் மாகாணத்தில் இருந்த பாமியன் புத்தர் சிலைகளை, மார்ச் 2001 இல் வெடிவைத்துத் தகர்த்தனர். ஆப்கானிஸ்தானில் பாக்ராம் மற்றும் பீமரன் போன்ற பகுதிகளில் இருந்த நூற்றுக்கணக்கான தூபிகள் இடித்து சிதைக்கப்பட்டன.

## பாமியன் வரலாறு

பாமியன், இந்தியாவின் காந்தார அரசின் கீழ் இருந்தது. இது, கி.பி.பதினோராம் நூற்றாண்டுவரை, சீனாவின் சந்தைகளையும், மேற்காசியப் பகுதிகளையும் இணைத்த பட்டுப் பாதையில் அமைந்திருந்தது. இவ்விடம், பல இந்து, பௌத்த துறவி மடங்களின் அமைவிடமாக இருந்ததுடன், சமயம், மெய்யியல், இந்திய-கிரேக்கக்கலை ஆகியவற்றின் மையமாகவும் விளங்கியது. இரண்டாம் நூற்றாண்டு முதல், ஒன்பதாம் நூற்றாண்டில் இஸ்லாமிய ஆக்கிரமிப்பு நிகழும் வரை இப்பகுதி ஒரு புத்த சமயத்தலமாக விளங்கியது.

இப்பகுதி மடங்களில் புத்த சமயத் துறவிகள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாழிடங்கள் மலைச்சரிவுகளில் குடையப்பட்ட சிறிய குகைகள் ஆகும். பல துறவிகள் தங்கள் குகைகளை புத்தர் சிலைகளாலும் ஒளிர் நிறங்கள் தீட்டப்பட்ட சுவரோவியங்களாலும் அழகூட்டியிருந்தனர். இவற்றுள் முதன்மையானவை பாரிய, நிற்கும் புத்தர் சிலைகளானவை ரோசனா் சிலையும் சாக்கியமுனி சிலையும் ஆகும். இவற்றுள் முதல் சிலை 55 மீற்றர்களும் அடுத்தது 37 மீற்றர்களும் உயரம் கொண்டவை. இவையே உலகின் மிகப்பெரிய நிற்கும் புத்தர் சிலைகள் ஆகும். இப்பகுதியின் மிகப் பிரபலமான பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கிய இச்சிலைகள் இருந்த இடமும் சூழவுள்ள பண்பாட்டு நிலத்தோற்றம், தொல்லியல் எச்சங்கள் அனைத்தும் யுனெஸ்கோவினால் உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டது.

சிறிய சிலை கி.பி.507 ஆம் ஆண்டிலும் பெரியது 554 ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டவை ஆகும். இவை குஷாணர்கள் மற்றும் ஹூணர்களால் அவர்கள் பேரரசுகள் உச்ச நிலையில் இருந்த போது உருவாக்கப்பட்டவை. மேற்குறிப்பிட்ட இனத்தவரே தற்கால ஆப்கானிஸ்தானில் அதிகமாகத் துயரங்களுக்கு உள்ளாகிய ஹசாரா இனத்தவரின் முன்னோர்களாவர். ஹசாரா இனத்தினரின் உடலமைப்பும் முக அமைப்பும் அங்குள்ள குகைகளிலும் பிற சின்னங்களிலும் காணப்படும் சுவரோவியங்களில் காண்பவற்றை ஒத்தவையாக உள்ளன. கி.பி.630 ஆம் ஆண்டில் இப்பகுதியூடாகச் சென்ற சுவான்சாங் (Xuanzang) என்னும் சீனப் பயணி, பாமியனை ஒரு பௌத்த மையமாக விபரித்துள்ளார். இவரது கூற்றுப்படி இங்கே பத்துக்கு மேற்பட்ட துறவி மடங்களும் ஆயிரத்துக்கு மேற்பட்ட துறவிகளும் இருந்ததாகத் தெரிகிறது. இரண்டு புத்தர் சிலைகளும் பொன்னாலும் மணிகளாலும் அழகுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அவரது குறிப்புக்கள் காட்டுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இவ்விடத்தில் படுத்த நிலையில் இவ்விரண்டையும் விடப் பெரிய புத்தர் சிலையொன்று இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது ஒரு காலத்தில் முற்றாகவே அழிந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது.

## புத்தர் சிலைகள் மீதான தாக்குதல்

11 ஆம் நூற்றாண்டில் மேற்கு இந்தியாவின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தானையும் கஜினி முகமது கைப்பற்றிய போது, துறவி மடங்களும் பிறவும் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டபோதும், இவ்விரு புத்தர் சிலைகளையும் சுவரோவியங்களையும் எதுவும் செய்யவில்லை. நாதிர்ஷா இச்சிலைகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தினான். எனினும் பின்னர் பல நூற்றாண்டுகளாக இச்சிலைகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை.

## அழிப்புக்கு முந்திய தலிபான்கள்

1999 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முல்லாமுகம்மது உமர், பாமியன் புத்தர் சிலைகளைப் பாதுகாப்பதற்கு ஆதரவாக ஆணையொன்றை வெளியிட்டார். ஆப்கானிஸ்தானில் தற்போது புத்த சமயத்தவர் எவரும் இல்லாததால் இச்சிலைகளை வணங்குவதற்குரிய வாய்ப்புக்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், இச்சிலைகள் வெளிநாட்டினரின் வருகை மூலமாக நாட்டுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பனவாக இருக்கும் என ஆப்கானிஸ்தான் அரசு கருதுவதாகவும் அதனால், தலிபான்கள் அவற்றை அழிக்காமல் பாதுகாப்பார்கள் எனவும் அறிவித்திருந்தார்.

> 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முல்லா முகம்மது உமர், பாமியன் புத்தர் சிலைகளைப் பாதுகாப்பதற்கு ஆதரவாக ஆணையொன்றை வெளியிட்டார். ஆப்கானிஸ்தானில் தற்போது புத்த சமயத்தவர் எவரும் இல்லாததால் இச்சிலைகளை வணங்குவதற்குரிய வாய்ப்புக்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், இச்சிலைகள் வெளிநாட்டினரின் வருகை மூலமாக நாட்டுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பனவாக இருக்கும் என ஆப்கானிஸ்தான் அரசு கருதுவதாகவும், அதனால், தலிபான்கள் அவற்றை அழிக்காமல் பாதுகாப்பார்கள் எனவும் அறிவித்திருந்தார்.

ஆப்கானிஸ்தானின் தீவிர மதவாதிகள், அந்நாட்டின் இஸ்லாமுக்கு எதிரான பிரிவினரை இலக்காகக் கொண்டு எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றைத் தொடங்கினர். மிக விரைவிலேயே தாலிபான் எல்லாவித உருவச்சிலைகளையும், இசை, விளையாட்டு என்பவற்றையும், தொலைக்காட்சியையும்கூட இஸ்லாமியச் சட்டங்களுக்கு எதிரானவை எனக்கூறித் தடை செய்தனர். கலாசார அமைச்சரான கதிரத்துல்லாகமால், அசோசியேட்டட் பத்திரிகை நிறுவனத்துக்கு அளித்த பேட்டியின்போது, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 400 மதத்தலைவர்கள் கூடி, புத்தர் சிலைகள் இஸ்லாத்துக்கு எதிரானவை என்ற முடிவுக்கு வந்திருப்பதாக அறிவித்தார்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்தின் கூற்றுப்படி, இது தொடர்பாகக் கூட்டப்பட்ட 54 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பின் கூட்டத்தின் போது, தலிபான்களின் ஆட்சியை அங்கீகரித்த பாகிஸ்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட எல்லா நாடுகளும் தலிபானின் நடவடிக்கைக்கான எதிர்ப்பைத் தெரிவிப்பதில் இணைந்து கொண்டனர். மார்ச் 2001 இல் வெடிவைத்துத் தகர்ப்பு

மார்ச் தொடக்கம் முதலாக, டைனமைட்டு வெடிபொருள்களைப்பயன்படுத்திப் பல வாரங்களாக உடைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது பல படிகளாக இடம்பெற்றது. முதலில், விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும், கனரகப் பீரங்கிகளையும் பயன்படுத்தி சிலைகளைத் தாக்கினர். பின்னர் தாங்கி எதிர்ப்புக் கண்ணிவெடிகளை அடிப் பகுதியில் வைத்து வெடிக்க வைத்தனர். மேலும் அப்பகுதி மக்களில் சிலரை மலை மீது ஏற்றி சிலைகளில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த பிளவுகளில் வெடி பொருள்களைப் பொருத்தி வெடிக்க வைத்தனர்.

(தொடரும்...)

## மாலதியின்...

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஈகைச் சுடரினை ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

நினைவேந்தலை தடுக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் காரியாலயத்திற்கு முன்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டதுடன் இராணுவத்தினரால் பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயம் அமைந்திருக்கும் வீதியின் நுழைவாயிலில் இராணுவத்தடை அமைத்து அவ்வீதியால் செல்பவர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தினர். (ஞா-100)

## 35 பேர்...

யில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 331 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 6 பிள்ளைகளின்...

கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வேலை முடித்து தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த 51 வயதுடைய இராமலிங்கம் புஸ்பராஜ் என்ற 6 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடி வந்த நிலையில் நேற்று நண்பகல் இறந்தநிலையில் பிரமந்தனாறு பிரதான கால்வாயில் அவரின் சடலம் இனங்காணப்பட்டதையடுத்து தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த தகவலையடுத்து சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-100,316)

## யாழில்...

யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூத்ததம்பி வீதி, மானிப்பாய் என்ற முகவரியைச் சேர்ந்த 85 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## புதிய முறைமை...

மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகளை சகித்துக்கொள்ள முடியாது என்றும் அவற்றைக் கட்டுப்படுத்த அனைத்து அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் மக்களுக்காக பணியாற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்று படைப் பிரிவுகள் மற்றும் புலனாய்வு சேவைகளின் கட்டமைப்பை வலுவாக்கியதன் மூலம் தேசிய கடமைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் நாட்டில் மீண்டும் பயங்கரவாத அல்லது மதத் தீவிரவாதம் நிகழாமல் இருக்கும் வகையில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட்ட உயர் அதிகாரிகளும் பங்குகொண்டிருந்தனர். (ஞா)

## குமாரதாஸ்...

அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக் காலை கிரியைகள் இடம்பெற்று முற்பகல் 11.15 மணியளவில் அவரின் இறுதி யாத்திரை ஆரம்பமாகியது.

நண்பகல் 12 மணியளவில் நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் சமயச் சடங்குகளை அவரது மகன் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் நிறைவேற்றி வைக்க, சிவாச்சாரியர்களின் திருமுறைப் பாராயணத்துடன் குமாரதாஸ் மாப்பாணரின் திருவுடல் தீயுடன் சங்கமமாகியது. (ஞா)

## சமையல் எரி...

ரூபாயினாலும் 2.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 231 ரூபாயினாலும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 2,750 ரூபாயாகவும் 5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 1,101 ரூபாயாகவும் 2.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 520 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு, சீமெந்து மற்றும் கோதுமை மா என்பவற்றின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் தற்போது அதுசார்ந்த நிறுவனங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்றைய தினம் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

50 கிலோகிராம் நிறையுடைய சீமெந்து மூடையின் விலையை 97 ரூபாயினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 முதல் 12 ரூபாய் வரையில் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஞா)

## 19ஆவது...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட காணொளிப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போது அவருக்கு அரசியல் அனுபவம் வரையறுக்கப்பட்டவை என்றும், எனவே பிரதமர் முன்வந்து அரசியல் அனுபவம்மிக்க அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது சிறந்தவொரு நிலைப்பாடாகும். காரணம் 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் தோல்வி என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்தத் திருத்தத்தின் காரணமாக அமைச்சரவை அரசியலமைப்பு இல்லாமல் போனது.

பொருளாதாரத்திலும் கொரோனாவிலும் அரசாங்கத்திற்குள் ஒரு அரசாங்கம் காணப்பட்டது. அதேபோன்று அரிசி விலை தொடர்பிலும் அரசாங்கத்திற்கு வெளியில் அரசாங்கமொன்று காணப்பட்டது.

இதன் பிரதிபலன் என்ன? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக இல்லாமல் போனது. எதிர்பார்ப்புக்கள் சரிவடைந்தன. அவ்வாறெனில் இந்த முறைமையின் மூலமாக சாதகமான பிரதிபலன் கிடைக்கவில்லை.

எனவே ஜனாதிபதி தெரிவித்ததைப் போன்று சம்பிரதாய அமைச்சரவை நிர்வாகத்திற்கு செல்வது சிறந்தது.

எனவே 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகித்துச்செல்ல வேண்டும் என்றார். (ஞா)

## தமிழ்...

ஒருவர் நேற்றைய தினம் மொனராகலை நீதவான் நீதிமன்றால் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை அக்கரைப்பற்று, சின்னப்பனங்காட்டை சேர்ந்த கதிரவேலு கபிலன்(வயது-29) என்பவரே மேற்படி விடுதலை செய்யப்பட்டவராவார்.

கொழும்பு-புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் பிசிஆர் பரிசோதனைகளை அடுத்து நேற்று பிற்பகல் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு உறவுகளுடன் இணைந்துள்ளதாக குடும்பத்தினர் குரலற்றவர்களின் குரல் அமைப்பிற்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (ஞா-33,299)

## விலையேற்றத்...

கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அரசியல் நோக்கிற்காக எதிர்த்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஞா)

## பொலிஸார்...

துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி அனைவராலும் தாமரை என அழைக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் கடந்த தை மாதம் தொடக்கம் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வவுனியாவுக்கு கடமை நிமிர்த்தம் சென்றவேளை இடம்பெற்ற விபத்தில் இரு பொலிஸாரும் உயிரிழந்துள்ளதாக அறியமுடிகிறது. (ஞா-60)






















# ஆலயத்தினுள் அனைவரும் சமம்; இறுதிவரை நிலைநிறுத்தியவர்

## மாப்பாண முதலியாரின் மறைவு குறித்து நீதியரசர் விக்னேஸ்வரன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது எஜமானார் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் மறைவு எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மறைந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் 1964ஆம் ஆண்டு மார்கழி முதலாம் நாள் தொடக்கம் தமது இறுதி மூச்சுவரை நல்லூர் கந்த சுவாமி கோவிலின் பத்தாவது எஜமானாராக கடுமையாக உழைத்து தமது 92ஆவது அகவையில் தமது பூவுலகக் கடமைகளை மனநிறைவுடன் பூர்த்திசெய்து ஆறுமுகக் கடவுளின் பாதார விந்தங்களைப் பற்றிச் சென்றுள்ளார். அவரின் மறைவு எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரின் நிர்வாகத்திறன் அனைவராலும் பாராட்டப்பட்ட தொன்று. ஆலயத்தில் அடியவர்களுடன் தானும் ஓர் அடியவனாக எளிமைத் தோற்றத்தில் காட்சியளித்த அவரின் கண்கள் ஆலயத்தில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் ஊன்றி அவதானித்து சீர்செய்யத் தவறியதில்லை.

ஆலயத்தினுள் அரசன் தொடக்கம் கடைநிலை ஆண்டி வரை சமநிலை உடையவர்கள் என்பதை இறுதிவரை நிலை நிறுத்தியவர். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் அன்பு மனைவி, உற்றார், உறவினர்கள் அனைவரையும் இப் பெருந்துயரத்திலிருந்து மீள இறைவன் வழிசமைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது. (ஞா)

# கிரிக்கெட் ஆடிய ஜனாதிபதி கோட்டா



(கொழும்பு)

72ஆவது இராணுவ தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அநுராதபுரம் சாலியபுரவிலுள்ள கஜபா கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிரிக்கெட் மைதானத்தையும் திறந்து வைத்தார்.

மைதானம் திறக்கப்பட்ட பின்னர் முன்னாள் கிரிக்கெட் வீரர் திசர பெரேரா வின் பந்தை ஜனாதிபதி எதிர் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜந்த மெண்டிஸும் கலந்து கொண்டார். (ஞா)

# எமது அரசாங்கத்தின்மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

(கொழும்பு)

தாமும் தமது அரசாங்கமும் எதிர்பார்த்ததைப்போன்று செயற்படவில்லை என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளமையை தாம் ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

புதிய உத்வேகத்துடன் நாட்டை முன்நோக்கி கொண்டுசெல்வதை உறுதிப்படுத்துவதாக ஜனாதிபதி இதன்போது கூறினார்.

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய அநுராதபுரம் - சாலியபுர கஜபா படையணி தலைமையகத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# பருத்தித்துறையில் மோதல்; ஐந்து வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை புனிதநகர் பகுதியில் நேற்று இரவு குழுமோதல் இடம்பெற்றதில் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல கிராமங்களிலிருந்து பெருமளவானவர்கள் அழைத்துவரப்பட்டு தமது பகுதி வீடுகள் மீது தாக்குதல் நடத்தியதாக தாக்குதலுக்கு உள்ளான மக்கள் தெரிவித்துள்ளனர்.

வன்முறை கட்டுமீறிச் சென்றமையால் பருத்தித்துறை பொலிஸாருக்கு துணையாக நெல்லியடிப் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடத்தப்பட்ட வீடுகளுக்கு நெருக்கமான வீட்டில் இருந்த ஒருவர் சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (ஞா)

# தென்னை விழுந்ததில் சிறுமி படுகாயம்

## கொடிகாமத்தில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-தவசிக்குளம் பகுதியில் தென்னை மரம் சிறுமி மேல் விழுந்ததில் 9 வயதுச் சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

வீட்டுக்கு ஆபத்தான விதத்தில் நின்ற தென்னை மரத்தை கடந்த வெள்ளிக்கிழமை தறித்தபோது பக்கத்து வீட்டுச் சிறுமி அதனுள் அகப்பட்டு கால் மற்றும் முதுகுப் பகுதியில் படுகாயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தவசிக்குளம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 9 வயதான சிறுமியே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஞா-30)


மாபிள் பதித்தல்
தரமான முறையில் மாபிள் வேலை செய்து தரப்படும்.
A. ஜீவா
077 187 6805
(C-2794)

கணனி திருத்தம்
Iphone, Android Phone களும் திருத்திக் கொடுக்கப்படும்.
உங்கள் கணனிகள். Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம்.
கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் Laptop களும் வாங்கப்படும்.
(6208)
தொடர்புகளுக்கு
NPO Computer System - 077 243 8537

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536
அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576
(C-2798)

அமெரிக்க லொத்தர் விசா
2023ல் நீங்களும் அமெரிக்காவில்...
விரையுங்கள் பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
(C-2791)
0768226244
யாழ்ப்பாணம் 0768226243
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670
புதுக்குடியிருப்பு 0764550673
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960
V2 Travels www.facebook.com/v2tandt

IMMEDIATE VACANCY
Administrative Assistant
Duties
Assisting Visa Applications
Air Ticketing
Office Administration
Requirements
Able to Handle Multiple Tasks
Salary- 30'000/=
CIMS COLLEGE 0777068777
49A, Chappel lane Jaffna (near Jaffna Central college)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
0768226240
DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.